# ஞானஸ்நானத்தில் நாம் என்ன செய்கின்றோம்?

நாம் ஞானஸ்நானம் பெறுகின்றபோது புரிந்து கொள்ளப்பட வேண்டிய நான்கு கருத்துக்களை ஞானஸ்நானம் விளக்குகின்றது. நாம் கிறிஸ்தவர்களாகும்பொழுது என்ன நடக்கின்றது என்பதை இந்தக் கருத்துக்கள் விவரிக்கின்றன.

## நாம் கொடுக்கின்றோம்

நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது தேவன் நம் வாழ்வில் அவர் தம் திருத்தப் பணிகளை நிகழ்த்தும்படியாக நம்மையே நாம் அவருடைய கரங்களில் தருகின்றவர்களாய் இருக்க வேண்டும் (கொலோ. 2:12). இந்த வேளையில் நாம் தேவனுடைய வசனத்தைக் கவனமாய் ஆராய்ந்திருக்க வேண்டும் (யோவா. 6:45; அப். 18:8). இயேசுவுக்கு நம்மையே கொடுக்கத் தீர்மானம் செய்வதினால், நாம் நீதிக்கு ஊழியம் செய்யும்படி உலகத்தின் ஊழியத்தை விட்டு விடுகின்றோம் (ரோமர் 6:17, 18). நாம் இயேசுவை ஆண்டவரென்றும், கிறிஸ்துவென்றும், தேவகுமாரன் என்றும் இருதயத்தில் கொண்டுள்ள விசுவாசத்தை வாய்மொழியாகவும் சாட்சியளிக்க வேண்டும் (ரோமர் 10:9, 10). இயேசுவுக்குள் ஒரு புது வாழ்வில் பிரவேசிக்கக் கூடும்படிக்கு நமது கடந்த காலத்திற்கு மரிப்பதன் மூலம் ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுக்கு நம்மையே கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (ரோமர் 6:4).

## நாம் பெறுகின்றோம்

இவ்வழி முறையில் நாம் நம்மையே கொடுத்தால், தேவனால் அளிக்கப்பட்டுள்ள பாவமன்னிப்பை இயேசுவின் இரத்தத்தினால் நாம் பெறுவோம் (அப். 2:38; கொலோ. 2:12, 13; எபி. 9:22). அவருடைய இரத்தம் நமது பாவங்களைக் கழுவும் (அப். 22:16; வெளி. 1:5) மற்றும் இரட்சிப்பை அருளும் (மாற். 16:15, 16; 1 பேது. 3:21). கடந்த காலப் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்டிருப்பதென்பது தெளிவான மனச்சாட்சியை விளைவிப்ப தால் நாம் ஒரு புதிய தொடக்கத்தைப் பெறுவோம் (1 பேது. 3:21). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒரு புதிய வாழ்வைத் தொடங்கு

*கின்றோம் (ரோமர் 6:4).*

## நாம் ஆகின்றோம்

*நமது பாவங்கள் அழிக்கப்பட்ட பிறகு, நாம் கிறிஸ்துவுக்குள் புதுச் சிருஷ்டிகளாகின்றோம் (2 கொரி. 5:17). மீண்டும் பிறந்திருத்தலினால் (யோவா. 3:3-5) நாம் தேவனுடைய பிள்ளைகளாகின்றோம் (கலா. 3:26). நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்ட பொழுது (ரோமர் 6:5) அவரிடத்திலும் (எபி. 3:14) அவருடைய இயல்பிலும் (2 பேது. 1:4; 2 கொரி. 5:21ஐக் காணவும்) பங்குள்ளவர்கள் ஆகின்றோம். நாம் கிறிஸ்துவை "அணிந்து" கொள்கின்றோம் (கலா. 3:27) மற்றும் அவருடைய சாயலாக உருமாற்றப் பட்டு (2 கொரி. 3:18) அவரைப் போலாவதற்கு வளருகின்றோம்.*

## நாம் பிரவேசிக்கின்றோம்

*நாம் தேவனுடைய பிள்ளைகளாவதினால் நாம் தேவனுடைய குடும்பமும், வீட்டாருமாகிய சபையினுள் பிரவேசிக்கின்றோம் (1 தீமோ. 3:15). சபையும் சரீரமும் ஒன்றே (எபே. 1:22, 23). ஞானஸ்நானத்தின் மூலம் நாம் இயேசு கட்டி எழுப்பியதும் (மத். 16:18) மற்றும் அவரையே தலைவராகக் கொண்டதுமான (எபே. 5:23) ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசிக்கின்றோம் (1 கொரி. 12:13, 27). கிறிஸ்து மற்றும் அவரது சரீரம் ஆகியவற்றில் பிரவேசிப்பதினால் (ரோமர் 6:3; கலா. 3:27), தலையாகிய கிறிஸ்துவால் அருளப்படும் ஆசீர்வாதங்கள் யாவற்றுக்கும் நாம் வழிவாய்ப்பைப் பெறுகின்றோம். இது புது சிருஷ்டியாகுதல் (2 கொரி. 5:17) போன்ற ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் உள்ளடக்குகின்றது (எபே. 1:3). அவருக்குள் இயேசுவின் இரத்தம், கிருபை, இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவன் ஆகியவற்றின் மூலம் நாம் மீட்பைப் பெறுகின்றோம் (எபே. 1:7; 2 தீமோ. 2:1; 2:10; 1 யோவா. 5:11).*

*இயேசுவுக்குள் பிரவேசிக்கும் முன்பு நாம், "கிறிஸ்துவைச் சேராதவர் களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத் தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லா தவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தோம். முன்னே தூரமாயிருந்த (நாம்) இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானோம்" (எபே. 2:12, 13). பாவம்தான் நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கின்றது (ஏசா. 59:1, 2) மற்றும் அவர் நமக்கெதிராகத் தம் முகத்தைத் திருப்பிக் கொள்ளவும் காரணமாகின்றது (1 பேது. 3:12). நாம் ஞானஸ்நானம் பெறும்பொழுது நாம் இயேசுவுக்குள் பிரவேசிக்கின்றோம் (ரோமர் 6:3; கலா. 3:27). நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (அப். 2:38; 22:16), மற்றும் இனியும் நாம் தேவனற்றவர்களாகவோ மற்றும் இயேசுவிலிருந்து பிரிந்தவர்களாகவோ இருப்பதில்லை.*